

# எம்.ஆர்.டி. ரயில் திட்ட சேவை சுமுகமாக தொடங்கியது

கோலாலம்பூர், டிச. 18-

பிரதமர் டத்தோஸ்ரீ நஜிப் துன் ரசாக் அவர்களால் அதிகாரப்பூர்வமாக திறந்து வைக்கப்பட்ட எம்ஆர்டி ரயில் திட்ட சேவை சுமுகமாக நடைபெற்று வருகிறது.

அடுத்த ஆண்டு ஜனவரி ஒரு நாளைக்கு ஏறக்குறைய 16,000 பேர் பயணம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதோடு, பள்ளிக்கூட விடுமுறை முடிந்து அனைவரும் தலைநகருக்கு திரும்புவதால் இந்த நிலைமை இன்னும் நெருக்கடியாக இருக்கும் என எதிர்பார்ப்பதாக பிரசாரானா குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரியும் தலைவருமான டத்தோஸ்ரீ அஸ்மி அப்துல் அஸிஸ் தெரிவித்தார்.

இதற்கு முன்பு உள்ள சேவைகளோடு இந்த எம்ஆர்டி ரயில் சேவையின் வழியே அதிக பயணிகள் பயணிக்க வாய்ப்பு இருப்பதாக நேற்று ரயில் திட்டத்தை அதிகாரப்பூர்வமாக தொடக்கி வைத்தபின் இவ்வாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மேலும், எம்ஆர்டி நிலையத்தில் சைக்கிள் வண்டிகள் நிறுத்தி வைக்க நிறுவனம் ஆராய்ச்சி மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.